சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 193/2019

**PW 1 தண்டபாணி** **09.01.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தின் போது நான் எனது டிவிஎஸ் வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பின்புறம் மாரிமுத்து என்பவர் அமர்ந்திருந்தார் என்றால் சரிதான். விபத்தின் போது எங்கு சென்று வந்தேன் என கேட்டால் கோமங்கலத்தில் உள்ள எனது மாமன் மகனை பார்த்து விட்டு வந்துகொண்டிருந்தேன். விபத்தின் போது காது குத்து விருந்தை முடித்து வாகனத்தை ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். விருந்து எப்போது முடிந்தது என கேட்டால் இரவு 7.45 மணியளவில் முடிந்தது. விருந்தின் போது மது அருந்தினேனா அல்லது விருந்து முடிந்து மது அருந்தினேனா என்றால் மது அருந்தவே இல்லை. மருத்துவ அறிக்கையில் எனக்கு விபத்தின் போது மது வாடை வந்ததாக கண்டுள்ளது என்று கேட்டால் நான் மது அருந்தவே இல்லை. விபத்தின் போது எனக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. அந்த ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என கேட்டால் தாக்கல் செய்ய முடியாது. விபத்தானது எனக்கு வாகனத்தை ஓட்ட தெரியாத காரணத்தினாலும், மது போதையின் காரணத்தினாலும் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனது வாகனத்தின் பின்புறம் உட்கார்ந்து வந்த மாரிமுத்து எம்.எசி.ஓ.பி. எண். 95/2019 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கானது அவர் வழக்கை

நடத்தாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொன்னால் மாரிமுத்து இறந்துவிட்டார், வழக்கை பொருத்து எனக்கு தெரியாது. நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிக்சை பெற்றேன் என்றால் சரிதான். என்னுடைய காயச்சான்றிதழில் சாதாரண காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமும், மருத்துவ செலவும் ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக செலவு ஏற்பட்டதாக சொல்வது சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்தின் போது உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 3 ம் எதிர்மனுதாரர் காப்பீடு விதிமுறைகளுக்கு மாறாக உள்ள காரணத்தினால் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் அபராதம் செலுத்தியுள்ள காரணத்தினால் 3 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வருமானத்தை காட்டுவதற்கு எவ்வித ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலைக்கு சென்று வருகிறேன். நான் ஒவ்வொரு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றும், அவை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இழப்பீடு கொடுக்கும் பட்சத்தில் 1, 2 எதிர்மனுதாரர்கள் கொடுக்க வேண்டும் என்றும், இந்த வழக்கு 3 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு நானும் காரணம் என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கானது 3 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.